ARYA DHARMAM REGD. No. M. 2913.

TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்

சந்தா விபரம்.

[தபால் சிலவுள்பட]

ஜீவிய சந்தா	...	ரூ 50
ஒரு வருஷ சந்தா	...	ரூ. 3
ஆறுமாத சந்தா	...	ரூ. 1½

தனிப்பிரதி ஓரணு

மாதிரிப்பிரதிக்கு எழுதவும்

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.

ஒரு முழுப்பக்கம் ஒரு தடவை	ரூ. 20
அரைப்பக்கம் ஒரு தடவை	ரூ. 21
ஒருபத்தி ஒரு தடவை	ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு ஒரு தடவை	அணு 8

நீண்டகால விளம்பரங்களுக்கு தனி சார்ஜ்.

பு-25 | கும்பகோணம் விக்கிரம-ஞு ஆடி-மீ 17உ 1940-ஞு ஆகஸ்டு-மீ 1உ | ஸ-30

வாரக் குறிப்புகள்

ஸ்ரீவத்ஸ வெ. ஸோ. சர்மா

அக்ஷயமான பலன்!! பகவான் பள்ளி கொள்ளும் சயன ஏகாதசி முதல் வ்யுத்தான ஏகாதசி வரை சாதுர்மாஸ்யமாம். இக்காலத்தில் த்வாதசாக்ஷரீ (விஷ்ணு) ஜபம் குரு பக்திதானதர்மமிவைகள் அக்ஷயமானபலனை அளிக்குமென ஸ்ரீமஹாஸ்காந்த நாகர கண்டம் கூறுகிறது. ஆதலின் பட்டுக்கோட்டை துவரங்குறிச்சியில் சாதுர்மாஸ்யம் நடத்தும் ஸ்ரீ ஜகத்குருவை தர்சித்து கர்ப்பூர காணிக்கை [illegible]

சென்னை ஸ்ரீமடம் வ்யாஸபூஜை!! காலையில் மஹன்யாஸ பூர்வமாய் திவ்யாபிஷேகம் ஸஹஸ்ரநாமார்ச்சனை முதலியன நடந்தன. மாலையில் ஸ்ரீ வத்ஸ ஸோமதேவ சர்மா ஸ்ரீமத் பகவத்பாதாளிடமிருந்து வந்த சாதுர்மாஸ்ய பத்திரிகையைப்படித்து வியாஸ பூஜா தத்வம் அவர் செய்த பேருதவி ஸ்ரீ மதாசார்யாள் நடத்தும் சாதுர்மாஸ்ய விருதம், காணிக்கையளித்தல் முதலியவற்றைப் பற்றி 2 மணி உபன்யஸித்தார்.

சாதுர்மாஸ்யத்தில் சாதுர்மாஸ்ய கதை! பதினெண்புராண ப்ரவசநத்தில் தற்செயலாக இந்த ஸமயம் நாகர கண்டத்தில் ஷை விருதம் கிருஹஸ்தருக்கும் பெண்களுக்கும் எப்படி அநுஷ்டிக்கத்தக்கதென்ற கதை நடைபெறுகிறது. பலபெண்கள் அதுகூறிய வண்ணம், ஆடியில் சாகங்களையும் ஆவணியில் தயிரையும் புரட்டாசியில் பாலையும் அற்பிசியில் மாம்ஸ துல்யமான மாஷம் முதலியவற்றையும்விட தீர்மானித்தனர்.

சருக்கும் சமயமா? ஜின்னுவுக்கு பெருமை ஏறியதுபோல் இறங்கவு மாறம்பித்துவிட்டது! பல முஸ்லிமே தாக்குகின்றனர். கால வித்யாசம் பாவம்!! மக்காவுக்கு போவாரா?

பலருக்கு நலமே!! ஸர்வ கலாசாலையில் ராணுவ போதனை நடத்த பலர் முயற்சிக்கின்றனர். அத்துடன் நிற்காது. போர் முனைக்கும் சென்றால் பலருக்கு பலவகையான நன்மைகள் தோன்றும்!

தக்க முயற்சி செய்க! தென்னாட்டில் 300 பேர் ஒன்று சேர்ந்து ஓர் கிராமத்தை கொள்ளையடித்த செய்தி எல்லோரையும் நடுங்கச் செய்கிறது! யுத்த காலத்தில் இத்தகைய செயலுக்கு இடமளிக்காமல் உடனே கவனிப்பாரா?

இது வேறு வரியா? சென்னையில் வீட்டு வரி மிக அதிகம். பொறுப்பில்லாத ஒரு சிலர் கூடி பிச்சைக்காரர்களை காக்க ஓர் வரி போட சிபார்சு செய்கின்றனர். நகர ஸபை அனாவசியமாக ஓர் சார்பாருக்கு சலுகை காட்டி செலவழிக்கும் பணத்தில் எவ்வளவோ கார்யம் செய்யலாம்!!

அயோக்கியர்கள்!! சென்னை பார்த்தசாரதி ஸ்வாமி கோவிலில் புகுந்து பஞ்சமர் காரில் பறந்து விட்டனர்! இத்தகையோர்கள் புகழ்ச்சி கூறும்ஸமயம் பார்த்துப்பிடித்து சட்டப்படி சிக்ஷிக்கத்தக்கவர்கள். கோவில் வாசற்காப்பவர் திறமையுள் [illegible] டும்!

என்ன உத்தேசம்? வைஸ்ராய் அவர்கள் ஏகாந்தமாக சென்னை வந்து நீலகிரி செல்லப் போகிறார். ஏகாந்தமான வரவிற்கே அபரிமிதமான செலவாயிற்று. இந்தியா சட்ட சபையில் சில கக்ஷிக்காரர்களைப் பொறுக்கி அமைத்து இந்திய அரசாக்ஷி ப்ரதிநிதித்வம் வாய்ந்ததென காட்டவே வருகிறார் என அரசியல் வாதி கூற்று.

சென்னையில் ஓர் புதிய ஹால்!! ஸ்ரீமான் லாட் கோவிந்த தாஸ் தன் புத்ரன் நியாபகார்த்தமாக சைனு பஜாரில் ஓர் சிறிய ஹால் கட்டி பஜனை, மத உபன்யாசம் முதலியன நடத்துகிறார். ஸ்ரீமான் ஜட்ஜ் வரதாசாரி சுவாமிகள் அதைத் திறந்தார்.

வைதீக மஹா ஸபை! சென்னை மைலாபூரில் ஸ்ரீ மதாசார்யாள் விஜயத்திற்குப் பின் பலர் வேதாத்யயநம் செய்ய ஆரம்பித்தனர். சில சபை நின்றன. தீக்ஷாமங்கலம் பிரும ஸ்ரீ ராமசந்த்ர தீக்ஷிதரவர்கள் ஷை சபை ஆரம்பித்து பல லௌகிகர்களுக்கு, உபயுக்தமான மஹா மந்த்ரங்களைக் கற்பித்து வருகிறார். தற்சமயம் அருணம் ஆரம்பமாகிறது.

மந்த்ர ஸித்தருக்கு ப்ரார்த்தனை! அநேக காரணங்களைக்கொண்டு நமது சக்ரவர்த்திக்கு ஜயம் உண்டாகும்படி ப்ரார்த்திப்பது நமது கடமையாகும். ஸ்ரீ மடாதிபதிகளும் மந்த்ர ஸித்தி உள்ள சிஷ்யர்களும் தம் தம் இஷ்ட தேவதையை உபாஸித்து ஜயமுண்டாகும்படி பிரார்த்திக்க வேண்டுமென்று பிரும்மஸ்ரீ சு. வேதாரண்யம் நாராயணயஜ்வா அவர்கள் வேண்டுவதோடு தானும் சுப்ரமண்ய யந்தரம் போட்டு ஜபிப்பதாக தெரிவிக்கிறார்கள்.

ஒரு கோடி ரூபாய்

கனம் வைஸ்ராய் அவர்கள் சேகரித்து வரும் யுத்த ஸகாய நிதிக்கு இதுவரையில் ஒரு கோடி ரூபாய் வசூலாகியிருக்கிறது. சுதேச மன்னர்களும், பொது ஜனங்களும் தாராளமாக பொருளுதவி செய்து வருகிறார்கள்.

ஒரு ரூபாய் நோட்டு வெளிவந்து விட்டது

நாணய மாற்று நெருக்கடியைத் தவிர்க்க கருதி இந்தியா கவர்ன்மெண்டார் ஒரு ரூபாய் நோட்டுக்களை வெளியிட்டு விட்டார்கள்.

குழந்தைகளுக்கு வியாதி எல்லாம் சேர்க்கை ஆஹாரத்தினால் தான்.
தாய்ப் பாலில் வளரும் குழந்தைக்கு கட்டிமாந்தம் முதலிய நோய்கள் வாரா.
ஆயுர்வேதாசார்ய
V. B. நடராஜ சாஸ்திரீ அவர்களின்
பயஸ்யா
தாய்ப் பாலை அளவிலும் ஸாரத்திலும் அபிவிருத்தி செய்யும் உத்தம ரஸாயனம்.
விலை ரூ 2—4—0 தான்.
எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும் அல்லது நேரில்
'ஆத்ரேய'
ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர் ரோடு, திருச்சிராப்பள்ளி.
பயஸ்யா— புஸ்தகம் வேண்டுவோருக்கு இனாமாய் அனுப்பப்படும்.

C. S. தீக்ஷிதர் அண்டு கோ.,
பிரசுரங்கள்.

உத்தமர் சரித்திரம் பாகம்	1	0	3	0
„ „ „	2	0	4	0
„ „ „	3	0	5	0
கதாகுசும மஞ்சரி „	1	0	8	0
„ „ „	3	0	8	0
சுபாஷித மஞ்சரி		0	6	0
சப்த மஞ்சரி		0	5	0
போஜ சரித்ரம்		0	4	0
ப்ரதமபாடம்		0	5	0
விக்ரமாதித்தன்		0	8	0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன அச்சுகூடம், லிமிடெட், கும்பகோணம்

இராமேஸ்வரம்

ஆலயப்பிரவேச துக்கதினம்.

சென்ற ஜூலை மீ 8உ யன்று மாலை 7 மணிக்கு ஆலயப்பிரவேசம் நடந்த துக்கத்தை எல்லோரும் நன்குணருமாறு இவ்வூர் ஆஸ்திக மஹா ஜனங்கள் அனைவரும் ஒன்று கூடி மௌனமாகவே ஊர்வலம் வந்து ஸ்ரீ சங்கராசார்யசுவாமிகள் அவர்களின் மடம் முன்பாக பெரியதோர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தலைமை வகித்த ஸ்ரீ கே. என். சுப்பிரமண்ய சாஸ்திரிகளவர்கள் காங்கிரஸ் ஆக்ஷியும் தற்கால நிலைமையும் என்ற விஷயமாய் நீண்டநேரம் மிக உருக்கமாயும் கேட்பவர்களுக்கு பிரிட்டிஷ் ராஜாங்க விசுவாசமும் சனாதன வைதிகமத உணர்ச்சியும் ததும்புமாறு மெய்மறந்து உபன்யஸித்தார்கள்.

அதன் சுருக்கம் பின்வருமாறு:—காங்கிரஸ், ஆக்ஷி செலுத்தி வந்த நாளில் அதிகார மமதையால் ஜனங்கள் பரிதபிக்கும் வண்ணம் பல சட்டங்களை இயற்றினார்கள். அவைகளில் விவசாயக்கடன் மசோதா, வியாபார வரி மசோதா போன்ற பல அநீதி சட்டங்களை இயற்றும் காலத்திலும் சனாதனிகள் வருத்தமடைந்தபோதிலும்ஆக்ஷேபிக்கவில்லை. ஏனெனில், சனாதனிகள் பாரமார்த்திக விஷயங்களிலேயே நோக்கமுள்ளவர்கள், ஆதலால் இம்மையில் மட்டிலும் தீமையை விளைவிக்கும். முற்கூறிய சட்டங்களை அமைதியுடன் ஏற்றுக்கொண்டார்கள். சாரதா சட்டமோவெனில் இம்மையிலும் மறுமையிலும் அனைவருக்கும் பல தீமைகளை விளைவிக்கக்கூடியதால் சனாதனிகள் பலமாக [illegible] நேரிட்டது.

ஆலயப்பிரவேசச் சட்டமோ வெனில் உலகத்தையே பாழாக்கி நம்மை பலகஷ்டங்களிலிருந்தும் ரக்ஷித்துவரும் அரசாங்கத்திற்கே தீமையை விளைவிக்கக்கூடியதாக இருப்பதால் ராஜ விஸ்வாஸம் நிறம்பிய சனாதனிகள் ராஜாங்க க்ஷேமத்தைகருதியே விசேஷ ஊக்கத்துடன் ஆலயப்பிரவேசச்சட்டத்தை எதிர்த்ததுடன் காங்கிரஸையே அடியோடு வெறுக்க நேரிட்டது.

காங்கிரஸ்காரர்களுக்கு ராஜ விஸ்வாசமென்பது சிறிதேனும் இல்லையென்பது அவர்கள் பல நாட்களாகச்செய்து வந்த பல தீயச்செயல்களால் நன்கு அறியக்கூடிவிஷயமே.

ஆலயப்பிரவேசச் சட்டத்தை ஏற்படுத்த முயலும் தருணத்திலேயே வேத சாஸ்திரங்களை கற்றுணர்ந்த பல பெரியோர்களும் ஸ்ரீ மடாதிபதிகளும் இத்தீயச் சட்டத்தால் அரசாங்கமும் அதன் மூலம் பிரஜைகளும் பல சத்ருக்களால் துன்புறுத்தப்பட்டு பல கஷ்டங்களுக்குள்ளாவார்கள் என்று பல தடவை கல்பகோடி காலம் முதற்கொண்டே ஒளிமங்காமல் விளங்கிவரும் சாஸ்திரங்களிலிருந்து பலபிரமாண வசனங்களைக்கூறி இச்சட்டத்தைஇயற்ருவண்ணம் தடுத்தனர்

இம்மட்டிலுமா? முகலாய அரசாங்கத்தார் மத தர்மத்தில் பிரவேசிக்காததுடன் ஹிந்துதர்மத்துக்கு விசேஷ சலுகை காட்டிவந்ததுடன் நீதி வழுவாமல் அரசாண்டு வந்ததால் மிகவும் கண்யமாக ஷை அரசாங்கமும் பிரஜைகளும் ஒற்றுமையுடன் வாழ்ந்து வந்தார்கள்.

கடைசியாக வந்த ஒரு சில மொகலாய அரசர்கள் தன்னலம் கருதி ஹிந்துமதத்தை குலைக்கமுற்பட்டதின் காரணமாகவே ஷை அரசர்கள் அரசாங்கத்தை இழக்க நேரிட்டது. இவ்விஷயத்தை சரித்திர ஆராய்ச்சி நிபுணர்கள் ஒப்புக்கொள்ள மறுக்கமாட்டார்கள். என்பதையும் உதாஹரணமாக வெளியிட்டுள்ளார்கள்.

ஆகையால் ஆலயப்பிரவேசச் சட்டம், சாரதாசட்டம் போன்றவை, மத தர்மத்தை பாழாக்கக் கூடியதாய் இருப்பதால் முற்கூறிய வண்ணம் அரசாங்கத்திற்கும் பிரஜைகளுக்கும் கஷ்டத்தை விளைவிக்கக்கூடியதே.

ஆகையால் இச்சட்டங்களை செய்யக் கூடாதென, பலதடவை மே. த. வைஸ்ராய் அவர்களுக்கும் மே. த. கவர்னர் அவர்களுக்கும் லக்ஷகணக்கான தந்தி மூலமும் மஹஜர்கள் மூலமும் தெரிவித்தும் சனாதனிகளின் கண்களிலிருந்து இடைவிடாமல் சொறியும் கண்ணீர்களையும் தெய்வ கோபங்களையும் சாஸ்திரங்களின் உண்மையான உபதேசங்களையும் நீண்டகாலபழக்கவழக்கங்களையும் சிறிதளவேனும் லக்ஷ்யம் செய்தார்களில்லை.

அதன் பயனென்ன ?

இப்பூமண்டலத்தில் மிக மிகச்சிறந்ததாக விளங்கும் புண்ய க்ஷேத்திரங்களில் ஒன்ருனதும் மிகப்புனிதமானதும் மிகப்புராதனமானதுமான மதுரைமா நகரம். அந்நகரத்தில் விளங்கி வந்த ஸ்ரீ மீனாக்ஷி அம்மையின் மனக்கொதிப்பையும் சாஸ்திரங்களிடையேயும் தெய்வத்தினிடமும் பரிபூர்ண நம்பிக்கையையும் அகலாத பக்தியையும் கைக்கொண்ட பல பெரியோர்களின் மனமுடைந்து கலங்கியகண்களிலிருந்து ததும்பும் கண்ணீர்களையும் பொருட்படுத்தாது திருட்டுத்தனமாக ஷை ஆலயத்தில் தீண்டாதாரை பிரவேசிக்கச் செய்து ஆலயத்தையும் பாழாக்கி சட்டத்தையும் இயற்றினார்கள்.

வினைப்பயன்

[illegible] குள் யுத்தபேய் பிடித்து நாளுக்கு நாள் விருத்தியடைந்து இப்பொழுது நமது அரசாங்கமான பிரிட்டிஷ் ராஜாங்கத்தையும் தாக்க முயன்று வருவதை பத்திரிகை வாயிலாகத் தெரிந்து ஒவ்வொரு நிமிஷமும் நாம் கவலைக்குள்ளாகி இருக்கின்ருேம். லண்டனில் பாவி ஜெர்மனியின் குண்டுகள் விழுந்தனவென்பதைக் கேட்கும் போது ஐயோ! தெய்வமே அது பொய்யாகவே இருக்க வேண்டும் என்று கடவுளை வேண்டுகிருேம்

காரணம் ஒழியின் காரியமும் ஒழியும்

வேதசாஸ்திரங்களில்நம்பிக்கைகொண்ட பெரியோர்கள் நடைபெறும் யுத்தத்திற்கு காரணம்ஆலயப்பிரவேசச்சட்டமே என்று நிச்சயமாய் நம்பியிருப்பதால் ஷை சட்டத்தை அரசாங்கத்தார் உடனேயே ரத்துசெய்வதுடன் கும்பாபிஷேகம் முதலிய சுத்தி கர்மாக்களைச் செய்யவேண்டும். அத்துடன் ஸ்ரீமடாதிபதிகளைக் கலந்து சாஸ்திரங்களில் கூறியுள்ள வண்ணம் பல மந்திரோபாஸனைகளாலும் பிரயோகங்களாலும் சத்ருவை அடியுடன்துலைக்கத்தக்க ஏற்பாடும் செய்ய வேண்டும். அவ்விதம் செய்தால் சீக்கிரத்தில் நமது ராஜாங்கமும் ஜெயம் பெறுவது நிச்சயம்.

ஆகையால் ராஜவிச்வாஸம் நிறம்பிய சனாதனிகள் அனைவர்களும் மத விரோதமான சட்டங்களை ரத்து செய்யவும் பிரிட்டிஷ் ராஜாங்கம் எல்லாத்துறையிலும் பூர்ணஜெயம் பெறவும் அல்லும் பகலும் கடவுளைப் பிரார்திப்போமாக என்று பேசிமுடித்தார்கள்.

பின்னும் சில பிரமுகர்கள் சொற்பொழிவாற்றினார்கள். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. வந்தனோபசாரத்துடன் இரவு 10 மணிக்கு கூட்டம் நிம்மதியாய்க் கலைந்தது. ந. நி.

தர்மஸம்ரக்ஷண வாலிபர் சங்கம்

இராமேஸ்வரம்

1940-ஹூ ஜூலை-மீ 15-உ சோமவாரம் இரவு 7 30 மணிக்கு பிர்மஸ்ரீ கே. எ. சுப்பய்யா அய்யர் பி. எ. அவர்கள் அக்கிராஸனத்தில் ஷை விழா வாழ்த்து கீதங்களுடன் ஆரம்பமாயிற்று.

அக்கிராஸனர் முன்னுரையில் ஸனாதன விஷயமாய் விரிவாக எடுத்து பேசியும் இந்த விழாவிற்கு தாம் அக்கிராஸனம் வகிக்கும் படியான பாக்யம் கிடைத்தது பற்றி வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்ட பின் பிர்மஸ்ரீ ஹரிதாஸ் ஸ்ரீனிவாஸபாகவதர் அவர்கள் ஸ்ரீ துருவசரிதத்தை ரொம்பவும் அழகாகவும் பொது ஜனங்கள் மனதில் பதியும்படியாயும் உபந்யஸித்தார். மேலும் சங்கம் ஆலோசனையாளர் பி. மஹாதேவ சாஸ்திரிகள் சங்க அபிவிருத்தியைப்பற்றி பேசியபின் அக்கிராஸனர் முடிவுரையில் இச்சங்கத்தில் மெம்பர்களை ஜாஸ்தியாய் சேர்ப்பதற்கு முயற்சி செய்யவேண்டுமென்றும் நம் ஸனாதனம், தற்பொழுது தான் மதத்தையும் ஆலயத்தையும் கெடுத்து வரும் அக்கிரம போலி காங்ரஸ்வாதிகளின் அநீதிகளைஅழித்து வருகிறதென்றும் கூறினார். பிர்மஸ்ரீ சி. விஸ்வநாத சாஸ்திரியார் அவர்கள் சங்கத்தின் சட்டதிட்டத்தின் படி சங்க மெம்பர்கள் எல்லோரும்ஒற்றுமையாயிருந்து வர்ணாசிரமதர்மங்களை காப்பாற்றவேண்டுமென்று கூறியும் வந்தனோபசாரம் கூறியும் விழா இனிது முடிந்தது.

[illegible]

ஆத்தன்குடி

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்

ஆலயப்பிரவேச கண்டன தினம்

சு. வீர. கதிரேசன் செட்டியார் தலைமையில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

(1) காங்கிரஸ்காரர்கள் செய்த ஆலயப் பிரவேச அதர்மச் சட்டத்தை மாக்ஷிமிக்க சென்னை கவர்ன்மெண்டாரவர்கள் ஸநாதநிகளின் விருப்பத்திற்கிணங்க அடியோடு ரத்து செய்யவேணுமாய் மிகவும் விநயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது.

(2) கவர்மெண்டார் இப்போது யுத்தகாலத்தை பொறுத்து அநீதமான அச்சட்டத்தை ரத்து செய்யத் தயங்கினுல் யுத்தம் முடியும் வரை அமுலுக்குக் கொண்டு வராது நிறுத்தியும் யுத்தம் முடிந்த பிறகு அச்சட்டத்தை ஒழித்து விடுமாறும் வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுகிறது.

(3) அகில இந்திய தலைவர் ராவ்சாஹேப் என். நடேசய்யரவர்கள் ஆக்ஞைக்கிணங்க முன் ஆலயப்பிரவேசம் செய்துள்ள ஜூலை எட்டாந்தேதியை துக்க தினமாக பாவிக்கிறது.

(4) இப்பொழுது நமது பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்கு ஏற்பட்டிருக்கும் யுத்தத்தில் அவர்களுக்கு பூர்ண வெற்றி கிடைக்க வேணுமாய் ஈச்வரனைப் பிரார்த்திக்கிறது.

காரியதரிசி,

தக்ஷிணாயந ப்ரதம விவாஹம்.

(மஹாமஹோபாத்யாய, பெருகவாழ்ந்தான் ஸ்ரீ உ. வே. ரங்காசாரிய ஸ்வாமிகளின் ஆதரவு)

தக்ஷிணாயநத்திலும் ப்ரதமவிவாஹம் செய்யலாமாவென்ற விஷயமாக ஆர்யதர்மத்தில் வெளிவந்துள்ள அத்வைத ஸபா ஸப் கமிட்டியின் நிர்ணயத்தையாவரும் கவனித்திருக்கலாம்.

கும்பகோணத்தில், மிக ப்ரஸித்தராக விளங்கிவந்த மஹா வித்வானாகிய மஹாமஹோபாத்யாய பெருகவாழ்ந்தான் ரங்காசாரியஸ்வாமிகள் பல வருஷங்களுக்கு முன்பே தக்ஷிணாயந ப்ரதம விவாஹத்தை ஆதரித்து வந்திருக்கிறார். பல வர்ஷங்களுக்கு முன் இது விஷயமாக ஸ்ரீராம ஸ்வாமி கோவிலில் கூட்டப்பட்ட ஒரு வித்வத் ஸபையில் மேற்படி ஸ்வாமிகள் வெகு ஸ்பஷ்டமாக தக்ஷிணாயந ப்ரதம விவாஹத்தை ஆதரித்துப் பேசியது பலர் அறிந்த விஷயம்.

இவ்விஷயமாக மேற்படி ஸ்வாமிகளால் எழுதிவைக்கப்பட்டிருந்த சிறிய அபிப்ராயக்குறிப்பு ஒன்று மேற்படியார் குமாரர் ஸ்ரீ உ. வே. எம். ஆர். ஸ்ரீநிவாஸாசாரியர் மூலம் நமக்கு இப்போது கிடைத்திருக்கிறது.

மஹாவித்வானும், தர்ம சாஸ்திர நிபுணரும், நிஷ்பக்ஷபாதியுமாக யாவராலும் மதிக்கப்பட்ட அந்தஸ்வாமிகளுடைய அபிப்ராயமானது தத்காலம் மிக்க உதவியாயிருக்குமாகையால், அந்தவாக்யங்களை, அவைகளின் மொழி பெயர்ப்புடன் அடியில் குறிப்பிடுகிறோம்:—

"उदगयन पूर्वपक्षाहः पुण्याहेषु कार्याणि, इत्यस्य सूत्रस्य सौदर्शने व्याख्याने "एवं उदगयनादीनां विधानेऽपि क्वचित् अनियमः प्रतिभासते" सर्वर्तवो विवहस्येति सूत्रेण, "शैशिरौ मासौ उत्तमं च नैदाघं इति केचन मासाः निषिद्धाः ।

अत्र उत्तमनैदाघः, अन्त्यः आषाढः । उत्तममिति तमप् प्रत्ययात् यः सौरतोऽन्त्यो नैदाघः, यश्च अधिकमासतो द्वितीय आषाढः, तस्मात् एतान्मासान्वर्जयित्वा शिष्टेषु सर्वेषु मासेषु दक्षिणायनीयेष्वपि समावृत्य विवाहः कार्यः ।

कथमुदगयनानियम इति चेत्, "अनाश्रमी नतिष्ठेत दिनमेकमपिद्विजः" इति वचनेन समावर्तनस्यापिविवाहान्यंतसमीप कालिकत्वात् ।

अतः दक्षिणायनेऽपि समावर्तन पूर्वकप्रथमविवाहोपि कार्यएव । अत्र विषये अविगीत शिष्टाचारश्च प्रमाणं ।"

மொழி பெயர்ப்பு

(உதகயந பூர்வ பக்ஷ=என்கிற ஸூத்ரத்தின் ஸுதர்சன வ்யாக்யானத்தில், "உத்தராயண நியமம் விதிக்கப்பட்டிருப்பினும் சிலவிடங்களில் அந்த நியமமில்லையென்று விளங்குகிறது" ஸர்வர்த்தவ:, என்ற ஸூத்திரத்தினால் சைசிரௌமாஸௌ, உத்தமநைதாகம் என்று சில மாதங்கள் நிஷேதிக்கப்படுகின்றன. இதில், உத்தமநைதாகமென்பது கடைசியான ஆஷாடமாகும். "தமப்" ப்ரத்யயம் காணப்படுவதால் எது ஸௌர மாஸத்தின் கடைசியான நைதாகமோ, எதுவும் அதிக மாஸத்தின் இரண்டாவது மாஸமோ என்று ஏற்படுகிறது. ஆகையால் இந்த மாஸங்களைத் தவிர மற்ற மாஸங்களில் தக்ஷிணாயனத்தில் கூட ஸமாவர்த்தனம் செய்துகொண்டு விவாஹம் செய்யத்தக்கது.

உத்தராயண நியமம் ஏன் இல்லையென்றால்—அநாச்ரமீ நதிஷ்டேத—என்ற நியாயத்தால் ஸமாவர்த்தனமானது விவாஹத்திற்கு மிகவும் ஸமீபமாயுள்ள காலத்திலேயே செய்ய வேண்டியிருப்பதால் என்று அறியவும்.

ஆகையால் தக்ஷிணாயனத்திலும் ஸமாவர்த்தன பூர்வகமான ப்ரதம விவாஹமும் செய்யத்தக்கது.

இந்த விஷயத்தில் நிந்திக்கப்படாத சிஷ்டாசாரமும் ப்ரமாணமாகும்.)

இரண்டு ஸோம யாகங்கள்.

தஞ்சையின் பெரிய பாக்யத்தால் சென்ற ஆனி மீ 27௨ புதன்கிழமை யன்று சேங்காலிபுரம் ப்ரம்மஸ்ரீ நாராயண வாஜபேயி அவர்கள் அத்யக்நிஷ்டோமம் என்கிற ஸோமயாகத்தை ஸகாநாயகர் தெருவு மகா-ா-ா-ஸ்ரீ இந்துபட் அவர்களின் தட்டிமாலில் கும்பகோணம், சிருங்கேரி ஆகிய இரண்டு பீடத்து ஜகத்குரு அவர்களின் பரிபூர்ண அநுக்ரஹத்தை முன்னிட்டு ஸங்கல்பித்து ஐந்து நாட்கள் நடத்தினார்கள். ஷை பட் அவர்களின் ப்ராம்மண ஸந்தர்ப்பணமும் மற்றும் பலவித உதவியும் வாக்குக்கும் மனத்திற்குமே எட்டாதது. பல ஊர்களிலிருந்து மஹான்கள் ருத்விக்களாக வந்திருந்து நடத்தினார்கள். திருக்கருகாவூர் மகா-ா-ஸ்ரீ டி. எல். சுப்பய்யரவர்கள் ஷை வித்வான்களுக்கு விசேஷ மரியாதை செய்தனர். சேங்காலிபுரம் ஸ்ரீ அநந்தராம தீக்ஷிதரவர்கள், நாராயண தீக்ஷிதரவர்கள், வைத்தியநாத சாஸ்திரியளவர்கள், திருவிசநூர் வைத்தியநாத சாஸ்திரிகளவர்கள், சிமிழி வெங்கட்டராம சாஸ்திரியளவர்கள் ஆகிய பல வித்வான்கள் இடையிடையே அரிய பல விஷயங்களை உபந்யஸித்து ஜனங்களுக்கு ஆஸ்திக்யத்தை விருத்தி செய்தனர். ஷை யாகம் 31௨ ஞாயிற்றுக்கிழமையோடு முடிவுபெற்றது.

அதற்கடுத்த உத்தராயணத்தின் கடைசி தினத்தில் மேற்கண்ட பலவித ஸௌகர்யங்களையும் கண்டு மகிழ்ந்து ஷை வாஜபேயி அவர்கள் உக்த்யம் என்ற மற்றோர் ஸோமயாகத்தை ஸங்கல்பித்து நடத்தினார்கள். ஷை ஆடி மீ 4௨ வெள்ளிக்கிழமையோடு முடிந்தது. அடுத்த நாள் சனியன்றிரவு இந்திராதி தேவர்கள் தங்கள் ஸந்தோஷத்தை ஒரு அரிய பெரிய மழையால் வெளிப்படுத்தினர். மேற்கண்ட விஷயங்களை வடக்கு வீதி ஹைஸ்கூல் ஸம்ஸ்கிருத பண்டிதர் ஜீ. கல்யாணசுந்தர சாஸ்திரிகள் சில ச்லோகங்களில் அமைத்திருக்கிறார். ஓ. நி.

ஹிந்திப் ப்ரசாரத்திற்கு முனிஸிபாலிடிப் பணமா?

ஸர்க்கார் நிராகரிப்பு

கரூர் முனிஸிபாலிடியார் திருச்சி ஹிந்தி ப்ரசார ஸபைக்கு நன்கொடைத் தொகை கொடுத்ததை சென்னை கவர்ன்மெண்டார் ஏற்க மறுத்துத் தள்ளி விட்டனர். இது முனிஸிபாலிடி சம்பந்தமற்ற கார்யமென்று கண்டித்தனர்.

மதுரையில் அநுதாபக்கூட்டம்.

ஸ்ரீ முத்துச் செட்டியார் மரணத்தில் வருத்தம்,

25—7—'40ம் தேதி வியாழக்கிழமையன்று மதுரை டவுன் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஓர் மாபெறும் கூட்டம் இரவு 8 மணிக்கு தமிழ் சங்கம் ரோட் 55 நெ. பங்களாவில் ஸ்ரீமான் நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சுமார் 800 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள். அவ்வமயம கீழ்கண்ட தீர்மானம் ஸ்ரீமான் ராவ்பகதூர் ஆர். நரசிம்ம அய்யங்கார் அவர்களால் ப்ரேரேபிக்கப்பட்டது அதாவது:—

இங்கு கூடியுள்ள மதுரை டவுன் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க அங்கத்தினர்கள் எல்லோருமாக சிருவாலை, வெள்ளியன் குன்றம் ஜெமின்தாரும் மதுரை டவுனில் ஓர் சிறந்த ஸனாதன பற்றுள்ளவருமான ஸ்ரீமான் ராவ்பகதூர் ப. சி. முத்து செட்டியார் அவர்கள் மரணமடைந்ததை குறித்து பூர்ண மனத்துடனும் ஆழ்ந்த துக்கத்துடனும் அவருடைய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கும், அவருடைய, மனைவி, பிள்ளைகள், பெண்கள், ஆகிய இவர்களுக்கும் இந்த தீர்மானம் மூலம் துக்கத்தை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த தீர்மானம் எல்லோராலும் நின்று கொண்டு ஏகமனதாக நிறைவேறபபட்டது பிறகு கூட்டம் கலைக்கப்பட்டது.

ந-நி

அஹிம்ஸையை அங்கீகரிக்க முடியாது.

காந்திக்கு வைஸ்ராய் பதில்

ஸ்ரீமான் காந்தி தமது அஹிம்ஸைக் கொள்கையை பிரிடிஷ் கவர்ன்மெண்டார் அங்கீகரித்து அதன்படி ப்ரகிருத யுத்தத்தை ஸமாளிக்க விரும்புவார்களா என்று கனம் வைஸ்ராய் அவர்களைக் கேட்டிருந்தார்.

இதற்கு வைஸ்ராய் பதில் எழுதுகையில், பிரிடிஷாருக்கு காந்தியின் அபிப்ராயத்தைத் தாம் தெரிவித்ததாயும், ஆயினும் அஹிம்ஸை உயர்ந்த தர்மமாயிருந்தாலும் அதைத் தாங்கள் இந்த ஸந்தர்ப்பத்தில் ஏற்கமுடியாதென்றும் பதில் சொல்லி விட்டதாக அவர் காந்திக்கு தெரிவித்து விட்டார். ந. நி.

வேலூரில் ஸ்ரீ மாரியம்மன் கோவில் நாசமாக்கப்பட்டது

வேலூரில் அல்லாபுரமென்றவிடத்திலிருந்த ஸ்ரீ மாரியம்மன் கோவில் துஷ்ட மஹம்மதியர்களால் சென்றவாரம் ஒரு நாள் இரவில் இடித்து நாசமாக்கப்பட்டது. தெய்வ பிம்பங்கள் உடைத்துத் தூக்கி எறியப்பட்டிருந்தன. போலீஸார் விசாரணை செய்கிறார்களாம். ஹிந்து ஸமூஹத்தினர் மிகுந்த வருத்தமும் ஆத்திரமும் அடைந்துள்ளார்கள்.

ஒரிஸாவில் மந்திரி ஸபை இல்லை

ஒரிஸாவில் சில காங்கிரஸ் வாதிகள் சேர்ந்து கூட்டுக்கக்ஷி மந்திரி ஸபை அமைக்கச் செய்த முயற்சி பலிக்கவில்லையாம்.

இதில் ஸம்பந்தப்பட்ட காங்கிரஸ் தலைவர் ஸ்ரீமான் மிஸ்ராவைக் காரியக் கமிட்டி ஸஸ்பெண்டு செய்து தண்டித்து விட்டது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां।
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
விக்ரம-ஹூ ஆடி-மீ 3வ

ஹிந்து ஸமூஹ உரிமையை காங்கிரஸ் மதிக்காது

இந்தியாவின் ஸொந்த பிரஜைகளான கோடிக்கணக்கான ஹிந்துக்களுடைய அபிமானத்தால் வளர்ந்ததும், வலிமை பெற்றதுமான காங்கிரஸ் மகா ஸபையானது இன்று அந்த ஸமூகத்தின் உரிமைகளையும், கலை, நாகரீகம் போன்றவைகளையும் ஸம்ரக்ஷிக்க என்ன சிரத்தை எடுத்துக் கொண்டிருக்கிறதென்று கேட்டால் அது வெட்கித் தலைக்குனியவேண்டிய நிலைமையிலேயே இருக்கிறது. அன்யர்களும் வந்தேறிகளுமாகிய ஸமூகத்தாருடைய புன்சிரிப்பில் வாழ விரும்பி இன்றைய காங்கிரஸானது ஹிந்து ஸமூஹ உரிமைகளைக் கரையான்போல் சிறுகச்சிறுக அரிக்கச் செய்து கடைசியாக அந்த ஸமூஹமே உருத்தெரியாமல் அழிந்துபோகும் நாசவேலையில் முனைந்து நிற்பது பிரத்யக்ஷமான விஷயம் இதற்கு கணக்கற்ற உதாஹரணங்களை ராஜீய நிலைமையை அறிந்தவர்கள் அடுக்கிக் காட்ட முடியும்.

இத்தகைய ஆபத்தான புத்திப்போக்குள்ள காங்கிரஸ் வாதிகள் இப்போது இந்தியாவிற்குப் பூர்ண ஸ்வேச்சை வேண்டுமென்ற கூச்சல் போட்டு வருகையில் ஹிந்து ஸமூஹ நலவாதிகள்ஜாக்கிரதையாக இருக்கவேண்டியது மிக அவச்யமாகிறது. அதிலும் ஹிந்து ஸம்ஸ்தானங்களின் நிலைமைக்குப் பெரிய ஆபத்து நேராமல் பார்த்துக் கொள்ளவேண்டியது பெரிய கார்யமாயிருக்கிறது.

இவ்விஷயமாகச் சில தினங்களுக்குமுன் லக்ஷ்மணபுரியில் நடைபெற்ற ஹிந்து லீக் கூட்டத்தில் தலைமை வஹித்த ஸ்ரீமான் ஆனே செய்துள்ள எச்சரிக்கையை ஹிந்து ஸமூஹ க்ஷேமவாதிகளும், அதன் எதிரிகளாகத் தோன்றியுள்ள காங்கிரஸ் வாதிகளும் கவனிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்

காந்தியுள்பட காங்கிரஸ் வாதிகள் சுதேச சம்ஸ்தானங்களை, முக்யமாக ஹிந்து ஸம்ஸ்தானங்களை காங்கிரஸ் மனம்போனபடியெல்லாம் ஆடும்படியும், பணியும்படியும் சில காலமாக விஷம கார்யம் செய்து ஆக்ஞையிட்டு பயமுறுத்தி வருவதை ஸ்ரீமான் ஆனே எடுத்துக் காட்டுகிறார். ராஜ்கோட், ஜயப்பூர், திருவனந்தபுரம், மைசூர் போன்ற ராஜ்ய விஷயங்களில் காந்திஜீ, படேல், நேரு, பஜாஜ் முதலியத் தலைவர் தலையிட்டுக் குழப்பம் செய்து வந்ததை ஸ்ரீ ஆனே குறிப்பிட்டு அதை பலமாகக் கண்டிக்கிறார். எந்த காரணத்தைக் கொண்டும் இனி காங்கிரஸ் வாதிகளிடம் ஹிந்து ஸமூஹ க்ஷேமங்களை ஒப்படைக்க முடியாதென்றும், அவர்கள் ஹிந்து ஸமூஹ நம்பிக்கையை இழந்துவிட்டார்கள் என்றும், அந்த ஸமூஹ உரிமைகளை அவர்கள் மதித்து ரக்ஷிக்கமாட்டார்களென்பது நிச்சயமாகிவிட்டதாயும் ஸ்ரீ ஆனே கூறுகிறார்.

மேலும் ஸ்வேச்சை இந்தியாதோன்றும் ஸமயத்திலும் ஹிந்து சுதேச சம்ஸ்தானங்களின் நிலைமை இப்போதையைப் போலவே இருக்க வேண்டு மென்றும், அவைகளின் ஸ்வாதந்திரியத்தில் ஒருவரும் பிரவேசிக்க இடமளிக்கக் கூடாதென்றும், ஸ்ரீ ஆனே பலமாக வற்புறுத்துகிறார்.

ஸ்ரீமான் ஆனே உத்தமதேசாபிமானி. பழுத்த காங்கிரஸ்வாதி. காந்தி போன்றவர்களுடைய தேசாபிமானத்திலும், கௌரவத்திலும் சிறிதும் குறைந்தவரல்ல. காந்திக்கே அவரிடம் அளவற்ற மதிப்புண்டு அத்தகைய சிறந்த காங்கிரஸ் தலைவரான ஸ்ரீ ஆனேயே காங்கிரஸ் வாதிகளின், ஹிந்து ஸமூஹக்ஷேம நாசவேலையைக்கண்டிக்கிறாரென்றால் இதைவிட காங்கிரஸின் விபரீதப் போக்குக்கு வேறு என்ன ருஜு வேண்டும் ஹிந்து ஸம்ஸ்தான க்ஷேமங்களும், ஹிந்து ஸமூஹ க்ஷேமங்களும் காங்கிரஸ் காரர் கையில் பத்திரமாயிரா தென்று அவர் பலமாக நினைக்கிறார். வகுப்புத்தீர்ப்பு அநீதி, வகுப்புச் சண்டை போன்றவைகள் எக்காலத்தையும் விட இப்போது அதிகரித்துவிட்டன. மஹம்மதிய ஸமூஹத்தினர் என்றைக்கு மில்லாதபடி இன்று அளவற்ற உரிமைகளை பயமுறுத்தும் முறையில் கேட்கமுற்பட்டிருக்கின்றனர். ஸுக்கூர் முதலிய பல விடங்களில் வேண்டு மென்றே கட்டுப்பாடாக ஹிந்து ஸமூஹத்தினரின் உயிர், பொருள் முதலியவற்றிற்கு பயங்கரமான சேதம் விளைவிக்கப்பட்டு வருகிறது. எங்கும் ஹிந்து ஸமூஹத்தினர் நிர்கதியாக மதிகலங்கித் தவிக்கின்றனர். இவ்வளவு கேவலமான நிலைமைக்கும் காங்கிரஸ் காட்டிய சரணாகதிக் கொள்கையே காரணமென்று ஹிந்து தலைவர்கள் நினைக்கிறார்கள். ஹிந்து ஸமூகத்திற்கு மேற்கண்டவாறு பேராபத்து நேர்ந்துள்ள இக்காலத்தில் காங்கிரஸ் அதைப்பற்றி ஒன்றும் பேசாமல் மௌனம் சாதிப்பதுடன் நில்லாமல் மேற்கொண்டும் அந்தப்பிடிவாத ஸமூஹத்தினரின் வீட்டு வாசலில் ஸமாதானத்திற்காக காத்துக்கொண்டு நிற்பது எவ்வளவு வெட்கக் கேடு என்பதை டாக்டர் மூஞ்ஜே எடுத்துக்காட்டுகிறார்.

ஆதலால் சுயேச்சை அளிக்கும்படி காங்கிரஸ் கிளர்ச்சி செய்து வருகையில் ஹிந்து ஸமூஹம் அலக்ஷ்யமாயிருந்துவிடக்கூடாதென்று ஸ்ரீ ஆனே வற்புறுத்துவது மிக்க நியாயமான எச்சரிக்கையேயாகும்.

இந்தியாவுக்கு சுயேச்சை வழங்குவதாயிருந்தால் சுதேச சமஸ்தானங்களுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கைகளும் அவைகளது உரிமைகளும் கவனிக்கப்பட வேண்டுமென்று ஸர். ஸி. பி. ராமஸ்வாமி அய்யரும் திருவாங்கூர் சட்ட ஸபையில் எச்சரித்தார். இதற்கு மாஜி மந்திரி, ஸி. ராஜகோபாலாசாரியர் பரிஹாஸமாகப் பதில் சொல்லுகிறார்.

"பிரிடிஷ் கவர்ன்மெண்டும் காங்கிரஸும் ஒத்துப்போய் விட்டால் இந்த உடன்படிக்கை குறுக்கிட்டு நம்மை ஒன்றும் செய்ய முடியாது."

என்று ஸி. ஆர் சொல்லுகிறார். இதிலிருந்தே காங்கிரஸ் வாதிகள் ஸ்வேச்சை கேட்பதின் நோக்கமும், சுயேச்சை இந்தியாவில் சுதேச சம்ஸ்தானங்களை காங்கிரஸ் வாதிகள் நடத்தப் போகும் விதமும் வெட்ட வெளிச்சமாகி விடவில்லையா ?

சந்தாதார்களுக்கு முக்ய அறிவிப்பு

சென்றவாரம் ஸ்ரீஜனார்த்தன பிரஸ்ஸில் பவர் மெஷின் அமைக்கும் வேலை நடந்தது. அதில் ஏற்பட்ட எதிர்பாராததாமதத்தாலும், அஸௌகர்யத்தாலும் அச்சு யந்திர வேலை தடைப்பட்டதால், எவ்வளவு முயற்சித்தும் ஆர்யதர்மத்தை வெளியிட முடியாமற் போய் விட்டது.

மானேஜர்

"ஆஸ்திக ரத்ன"த்தின் அந்யாய மரணம்.

மதுரை ஸநாதனத் தலைவர்களில் முக்யஸ்தரும் ஜமீன்தாருமான ராவ்பகதூர் ஸ்ரீமான் முத்து செட்டியார் அவர்கள் அம்பலத்தாடி என்ற கிராமத்தில் 25வ யன்று யாரோ ஒரு படுபாவியால் ஸொந்த மனஸ்தாபம் காரணமாகக் குத்தப்பட்டார். நல்ல சிகிச்சை செய்யப்பட்டும் பயன்படாமல் காயம் காரணமாக அவர் இறந்து போனார்.

ஸ்ரீமான் செட்டியார் மிகுந்த ஆஸ்திகர். நிறம்ப தெய்வபக்தி உள்ளவர். ஆலயப் பிரவேச அதர்மக் கிளர்ச்சியை எதிர்த்து மதுரையில் நடந்துவரும் கார்யங்களில் அவர் முன்னணியில் நின்று உழைத்து வந்தார். மதுரை ஸனாதந ஸபையார் அவருக்கு "ஆஸ்திக ரத்நம்" என்ற பிருது வழங்கியிருந்தார்கள். ஸ்ரீமான் செட்டியார் அவர்களின் அகால அநியாய மரணத்திற்கு மிக வருந்துகிறோம். அவரது குடும்பத்தாருக்கு நமது அநுதாபத்தையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

கல்கத்தா ஸத்யாக்ரஹம் நிறுத்தப்பட்டது ஹால்வெல் சின்னம் அப்புறப் படுத்தப்படும்

ஸர்க்கார் இணக்கம்

கல்கத்தாவில் உள்ள இருட்டறை ஞாபக சின்னமான ஹால்வெல் சின்னத்தை அப்புறப்படுத்திவிட வங்க ஸர்க்கார் இணங்கிவிட்டனர் அதன் மேல் அதற்கான ஸத்யாக்ரஹம் நிறுத்தப்பட்டிருக்கிறது. இதுவரையில் இவ்விஷயமாக 200 பேர்களுக்கு மேல் சிறையில் வைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களும், ஸ்ரீமான் ஸுபாஸ் போஸும் சீக்கிரம் விடுவிக்கப்படலாம்.

ஸிந்து ஹிந்துகளுக்கு ஆபத்து!

மூர்க்க மஹம்மதியர்களின் துஷ்டத்தனம்.
ஸ்ரீ பம்னுனி கொலை செய்யப்பட்டார்.

ஸிந்து மாகாணத்தில் அராஜகம் வலுத்திருப்பதாக கவர்ன்மெண்டாரே ஒப்புக்கொள்கிறார்கள். ஏற்கனவே அங்கு சுக்கூர் கலஹம் காரணமாக ஹிந்துக்களின் உயிர், பொருள்களுக்கு நேர்ந்த கஷ்டம் ஸஹிக்கக்கூடியதாயில்லை. மேல் மேலும் அங்கு துஷ்ட மஹம்மதியர்களின் முரட்டுத்தனம் அதிகரித்து ஹிந்துக்களுக்கு பெரிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

ஸிந்து சட்ட ஸபை மெம்பரான ஸ்ரீமான் ராம் பம்னுனி என்றவர் மஹம்மதியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். ஹிந்து மந்திரிகளைக் கொலை செய்துவிட முயற்சியும் நடக்கிறதாம். நிலைமை அபாயமாயிருப்பதால் கவர்ன்மெண்டாரே முன் வந்து தக்க நடவடிக்கை எடுத்து அராஜகத்தை அடக்க பிரயத்தினம் செய்து வருகிறார்களாம்.

புனுவில் அகில இந்தியக் கமிட்டிக் கூட்டம்.
காந்தியின் பஹிஷ்காரம்

புனுவில் காங்கிரஸ் கார்யக்கமிட்டிக் கூட்டமும், அகில இந்தியக் கமிட்டிக் கூட்டமும் நடைபெற்றது. வார்தா அறிக்கையும், டெல்லித் தீர்மானமும் மெஜாரிடி வோட்டுக்களால் ஊர்ஜிதம் செய்யப்பட்டு நிறைவேறி விட்டன.

பாபு ராஜேந்திர பிரஸாத் முதலிய காங்கிரஸ் தலைவாகள் கார்யக் கமிட்டியின் தீர்மானத்திற்கு விரோதமாகப் பேசியதுடன் விரோதமாகவும் வோட்டு செய்தனர்.

மெஜாரிடியார் காந்திய அஹிம்ஸைக்கு எதிராகவே வோட் கொடுத்ததால் டெல்லித் தீர்மானம் நிறைவேறி விட்டது.

புனுக் கூட்டத்திற்கு காந்தியை வரும்படி காங்கிரஸ் தலைவர்கள் நேரில் சென்று எவ்வளவோ முயற்சித்தும் காந்திஜி தாம் காங்கிரஸ் கூட்டத்திற்கு வர முடியாதென்று கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

கோனேரி ராஜபுரம்
ஆலயப்பிரவேச துக்கதினம்

இவ்வூரில் 8—7—40ல் வர்ணாச்ரமஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் ஆலயபிரவேச துக்கதினம் கொண்டாடப்பட்டது. ஸ்ரீமான் கே. ராமமூர்த்தி அய்யர் கூட்டத்தில் தலைமை வகித்தார் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. மன்னருக்கு ஜயம் கிடைக்கவேணு மென்று பிரார்த்திக்கப் பட்டது. எல்லா கிராம சங்கங்களும் ஆர்ய தர்மம், தர்மராஜ்ய பத்திரிகைகளை ஆதரித்துத்தருவிக்க வேணு மென்றும் கோரப் பட்டது. வந்தனோபசாரதுடன் கூட்டம் முடிவு பெற்றது.

ந. நி.

கும்பகோணம் அத்வைத ஸபை
சாந்திபர்வ பிரவசனம்

குடந்தை அத்வைத ஸபையின் ஆதரவில் ஷை ஸபா பண்டிதரான பிரம்மஸ்ரீ சாஸ்திர ரத்நாகரம் திருவாதி விச்வநாத சாஸ்திரிகளால் ஸ்ரீ சங்கராசாரிய மடத்தில் சாந்திபர்வ பிரவசனம் ஆரம்பிக்கப்பட்டு தினம் மாலை 7 மணிக்கு நடை பெற்று வருகிறது.

ஏன் உலக யுத்தம் உண்டாயிற்று?
காங்கிரஸ் வீழ்ச்சிக்கு காரணம் என்ன?

தர்மத்தை நசுக்கி, ஹிந்து கோவில்களை கெடுத்ததால் தான்:—
வைஸ்ராய்க்கு ஸ்ரீ நடேசய்யர் கடிதம்.

"இந்நாட்டின் மக்களாகிய இருபது கோடி ஸனாதனிகள் தங்களிடத்தில் முறையிட்டுக்கொள்கிறார்கள். இப்படி செய்வதானது ஒரு சமயம் கடைசி தடவையாகவும் இருக்கலாம்.

உலக சமாதானத்தை கெடுப்பது எது? அதனால் ஏன் பிரிட்டிஷ் பிரஜைகள் துன்பப்படவேண்டும்? மாஜி காங்கிரஸ் மந்திரிகள் மத விஷயங்களில் தலையிட்டு, பிடிவாதமாகவும், அக்கிரமமாகவும், ஹிந்து கோவில்களை கெடுத்ததால் தான் என்பது பஹிரங்கமான உண்மையாகும். சென்ற செப்டம்பர் மீ 4உ, தாங்கள், சென்னை மந்திரி சபையின் சட்டங்களுள், மிகவும் கீழ்த்தரமான சட்டமான ஆலயப்பிரவேச சட்டத்திற்கு, தங்களுடைய எதிர்பாராததும், தீங்கை விளைவிக்கக்கூடியதுமான சம்மதத்தை கொடுத்தீர்கள். அதன் பிறகு என்ன நடந்ததென்பதை நினைத்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

மறுநாளே ஐரோப்பிய யுத்தம் துடங்கி விட்டது; காங்கிரஸ் அடியோடு வீழ்ச்சியடைய ஆரம்பித்து விட்டது; காங்கிரஸின் செல்வாக்கு மறைந்து விட்டது; நாட்டின் முதன்மை கட்சியாக கருதப்படும் காங்கிரஸுக்கும் மதிப்பு இருக்கிறதா என்பது சந்தேகத்திற்கு இடமாய் விட்டது; ஸ்தானம், பணம் எல்லாம் போய்விட்டது. ஜனங்களிடையே தன் கௌரவத்தை இழந்து விட்டது; அதனுடைய ஏழு மந்திரிகளும், தங்களுடைய பழயபெருமையுடன் திரும்பி வருவதற்கு இடமில்லாமல் தங்களுடைய பதவியை விட்டுப் போகும்படியான ஒரு நிலைமையை தாங்களே வருவித்துக்கும்படியாக ஆயிற்று.

ஒரு பக்கம் சோனுவாரியான மழை; மற்றொரு பக்கத்தில் பஞ்சமும் பிணியும் தாண்டவமாடுகிறது. வேறு இடத்தில் வெள்ளச் சேதம்; தீ விபத்து செய்தியானது ஒரு பாகத்திலிருந்து வருகிறது. சமுத்திரத்தில் கப்பல்கள் மூழ்குவதும், மனித உயிர்களின் சேதமும் தினப்படியான சம்பவமாய் விட்டது; பூகம்பங்களும், எரிமலைகளும் கிளம்புகின்றன; அத்துடன் ரயில் விபத்துக்களும் சேருகின்றன. எங்கு பார்த்தாலும் உயிர் சேதமும், பொருள் நஷ்டமுமாக இருக்கிறது. ராஜ்யங்கள் சீரகுலைந்தன; அரைத்தனங்கள் மறைந்தது; அரசர்களும், அதிபதிகளும் ஓடுகிறார்கள்; அப்படி இருந்தும் காங்கிரஸின் சிநேஹத்தை கோருவானேன்? காங்கிரஸின் அபிப்பிராயத்தை ஜனங்களின் அபிப்பிராயம் என்று நிர்ணயிப்பது தவறாகும். ஜனங்களின் விருப்பத்தை காங்கிரஸ் செய்யவில்லை. காங்கிரஸின் பிரதிநிதி காங்கிரஸ் தான். காங்கிரஸ் ஜனங்களின் பிரதிநிதி இல்லை. ஹிந்து இந்தியாவின் சார்பாக காங்கிரஸ் இருப்பதைவிட பிரெஞ்சு தளபதி பீடெய்ன் பிரெஞ்சு நாட்டின் பிரதமராக இருக்கிறார்.

பிரிட்டிஷ் அரசருக்கும், பரந்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்துக்கும் நமது கடமை என்ன? தங்களுடைய பாதுகாப்புக்காக பிரிட்டிஷாரை ஆச்ரயிக்கும் பல்லாயிரக்கணக்கான ஜனங்களுக்கு நாம்என்னசெய்யவேண்டும்? மதத்துக்கு நாம் செய்யும் தொண்டு என்ன? இவைகள், தங்களது திவ்ய சமூகத்திற்கும், தங்களது மூலமாக அரசர் பெருமானுடைய கவனத்திற்கும் பின்கண்ட வேண்டுகோளை செய்வதற்கு காரணமாயிருக்கின்றன.

"காலஞ் சென்ற மாட்சிமை தங்கிய விக்டோரியா மஹாராணியாரால் அனுக்ரகிக்கப்பட்டும், சமீபகாலம் வரை ராணியாரின் சந்ததியார்களால் காப்பாற்றப்பட்டும், காங்கிரஸால் அநீதியாகவும், கொடுங்கோன்மையாகவும் உதறித்தள்ளப்பட்ட உயர்ந்த தத்வங்களடங்கிய ஒரு சிறந்த கொள்கையான மத நடுநிலைமையை இப்பொழுதுள்ள அரசாங்கமானது நடைமுதலில் அனுஸரித்து நடக்குமானால், அரசாங்கத்துக்கு எல்லாவித க்ஷேமங்களும், நன்மைகளும் உண்டாவதோடு இல்லாமல், பிரிட்டன் யுத்தத்தில் வெற்றி பெறுவதும் நிச்சயம். சென்னை ஆலயப்பிரவேச சட்டத்தை மாற்றி, அசுத்தம் செய்யப்பட்ட கோவில்களில் சுத்தி கிரியைகள் செய்து, அவைகளை பழய சான்னித்தியத்திற்கு கொண்டு வராவிடில், அதனால் விளையும் தீங்குகளை நினைக்கவும் பயமாய் இருக்கிறது. நான் மேலே சொன்னதானது மூட நம்பிக்கையின் விளைவால் ஏற்பட்ட மன எழுச்சியின் சித்திரம் இல்லை என்பதை வணக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். சரித்திர காலத்திற்கு முன்பாகவே நடந்த பல சம்பவங்கள் திருப்பி வருகின்றன.

"கஷ்டத்திற்கு முன்னால் மனத்தாங்கலுடன் நிற்கும் நமக்கு நம்பிக்கை என்பது உபயோகமாயும், தேறுதலைக் கொடுக்கக் கூடியதாகவும் இருக்கிறது" என்பது பிரிட்டிஷ் பிரதமர் சர்ச்சிலின் வாக்கு."

மேற்கண்ட அறிக்கையானது மதுரை ராவ்சாகிப் என். நடேசய்யரால் மே. த. வைஸ்ராய்க்கு ஒரு விண்ணப்பமாக அனுப்பப்பட்டிருக்கிறது.

திண்டுக்கல்

ஸம்ஸ்கிருதபாடசாலை

15—7—40 யன்று ஸ்ரீ சங்கர மடத்தில் வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் அட்வொகேட் ஸ்ரீமான் வி. ஆர். விஸ்வநாத அய்யரால் பெண்களுக்காக ஓர் ஸம்ஸ்கிருத பாடசாலை திறந்து வைக்கப்பட்டது. அவ்வமயம் அவர் ஹிந்து பெண்களுக்கு ஸம்ஸ்கிருத ஞானத்தின் அவச்யத்தையும், இப்பாடசாலை கிறிஸ்துவ பள்ளிக்கூடங்களில் படித்து ஹிந்துத் தன்மை அற்றுபோகும் குணத்தை தடுப்பதற்கும் ஓர் மருந்தாகும் என்றார். மேலும் தாய் தந்தையர்களை அப்பாடசாலைக்குதங்கள் குழந்தைகளைஅனுப்பி பள்ளிக்கூட வளர்ச்சியில் ஈடுபடும்படி வேண்டிக்கொண்டார்.

பள்ளிக்கூடம் எல்லா ஹிந்து பெண்களையும் ஏற்றுக்கொள்கிறது. தற்பொழுது 64 பேர்கள் வரை சேர்ந்திருக்கிறார்கள்.

ந. நி.

தஞ்சாவூர் ஜில்லா மன்னார்குடி தாலூகா வடபாதிமங்கலம் ஸ்ரீ அருணசலேஸ்வரஸ்வாமி தேவஸ்தானம்.

வருமானங்கள்.	1342ம் பசலி ரூ.	அ.	பை.	1343ம் பசலி ரூ.	அ.	பை.	1344ம் பசலி ரூ.	அ.	பை.	1345ம் பசலி ரூ.	அ.	பை.	1346ம் பசலி ரூ.	அ.	பை.
பசலி ஆரம்பத்தின் ஆதாயம்	24309	8	3	27751	[illegible]	3	23517	1	0	26719	0	11	27167	9	10
நிலத்தின் வருமானங்கள்	7544	4	3	7946	10	6	8906	9	0	7953	13	6	7783	7	0
புஞ்சைப் பகுதி	726	4	9	774	7	2	538	11	8	550	10	0	552	3	0
வியண் ஆதாயம்	728	9	6	627	[illegible]	0	614	14	6	679	15	1	833	4	0
தவிடு முதலியவை விற்றமுதல்	30	12	4	50	0	10	19	5	10	108	4	6	15	1	2
வீட்டு வாடகை	129	0	0	116	12	0	105	8	0	104	0	0	101	4	0
சில்லரை வரவுகள்	113	10	5	72	2	7	196	12	8	522	8	2	221	4	11
தேவஸ்தான பாக்கி ஆதாயம்....	53495	9	3	49875	7	6	51557	8	9	49552	7	7	49537	11	10
	87077	10	9	87214	0	10	85456	7	5	86190	11	9	86211	13	9

செலவுகள்.	1342ம் பசலி ரூ.	அ.	பை.	1343ம் பசலி ரூ.	அ.	பை.	1344ம் பசலி ரூ.	அ.	பை.	1345ம் பசலி ரூ.	அ.	பை.	1346ம் பசலி ரூ.	அ.	பை.
தேவஸ்தான ஆரம்ப ஆதாயம்	50904	11	5	53495	9	3	49875	7	6	51557	8	9	49552	7	7
தினசரி படித்தனம்	1515	9	5	1282	9	3	1440	4	3	1497	13	1	1273	12	3
ஏருபடிகள்	421	10	4	515	2	8	352	13	3	416	0	9	325	3	7
பிர்ம உத்ஸவம்	1447	2	4	1105	9	11	941	4	2	646	0	5	701	10	2
சம்பள பட்டுவாடா	1335	13	1	2231	2	9	1903	5	6	1749	14	10	1870	6	0
சில்லரை சிலவுகள்	63	6	8	60	14	0	52	5	10	57	4	4	58	9	6
கிராமச் சிலவுகள்	595	1	6	395	12	9	407	11	3	195	4	3	152	12	9
கிஸ்தி செலுத்தினது	2201	8	0	1937	7	8	2636	1	11	2236	4	9	2499	2	1
பரிவட்டம் வாங்கினது	....	....	....	....	....	....	52	11	3	....	....	....	....	....	....
பாத்திரம் வாங்கினது	....	....	....	....	....	....	39	8	0	...	....	....	....	....	....
விடுசள் ரிபேர்	170	9	0	85	0	6	449	8	3	138	9	9	94	11	6
வெருமானம் அளித்தது	31	4	11	103	3	10	104	11	3	73	2	2	70	14	6
மாமூல் செலவுகள்	13	8	0	30	12	0	30	12	0	30	12	0	30	12	0
நெல்சேகரித்ததற்கு கூலிகள்சம்பளம்	33	1	9	75	2	3	84	13	9	108	1	3	44	15	9
தள்ளிக் கொடுத்தது	....	....	....	142	12	7	10	0	0	...	....	....	30	9	0
டெலிபோன் சார்ஜ்	....	....	....	....	....	....	....	....	....	....	....	....	241	5	4
நெல் விற்றதில் ஆதாயம்	423	5	2	1662	10	9	271	12	6	55	9	7	368	14	5
கண்ட்ரிப்யூஷன்	....	....	....	466	4	0	....	....	....	....	....	....	431	4	0
சில்லரைச் செலவுகள்	170	8	8	106	13	8	84	3	10	260	12	0	85	2	3
பாக்கி ஆதாயம்	27750	6	6	23517	1	0	26719	0	11	27167	9	10	28379	5	1
	87077	10	9	87214	0	10	85456	7	5	86190	11	9	86211	13	9

SRI V. S. THYAGARAJA MUDALIAR, M. A.,
Hereditary Trustee, Vadapathimangalam.

Examined and found correct subject to the Audit report.
T. S. VISVANATHAN, G. D. A., R. A.,
Regd. Accountant & Auditor, Madras & Kumbakonam.

ஹிட்லரின் கனவு பலிக்குமா?

பால்கன் ஆதிக்கத்துக்கு ரஷ்ய முட்டுக்கட்டை

பிரிட்டன் ரஷ்ஷியா இரண்டையும் வென்றால் தான் கனவு நனவாகும்.

லண்டன் (தந்தி)

ஐரோப்பா கண்டம் முழுவதையும் ஒரு பெரிய ஜெர்மன் சுகாஸ்ரமமாக்கிவிட, சமாதானம் நிலவினாலுஞ்சரி யுத்தம் நடந்தாலும் சரி அது அவ்வளவும் ஜெர்மனியின் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உதவும்படி செய்துவிட, ஹிட்லர் ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்.

தற்போது கிட்டத்தட்ட ஐரோப்பா முழுவதையுமே அவர் கழுத்தைப்பிடித்து நெறித்துக்கொண்டிருக்கிறார். அவர் உண்மையிலேயே பிடித்துவிட்ட நாடுகள்போக மிச்சமாக வேறு என்ன கிடக்கிறது?

பேருக்கு நேசநாடாயிருக்கும் இத்தாலி உண்மையில் அவருக்குப் பணிவுடன் கீழ்ப்படிந்து நடக்கும் ஊழியனாய்த்தானிருக்கிறது. ஸ்பெயின் நாஸியரின் கைக்குள்ளேதான் கிடக்கிறது. ஸ்வீடனும் ஸ்விட்ஸர்லாந்துமோ பொருளாதார விஷயத்தில் ஜெர்மனியே கதியென்று கிடக்கின்றன. ஹங்கேரி ஜெர்மன் கோரிக்கை எதையும் நிராகரிக்க முடியாத நிலையிலிருக்கிறது.

ஒவ்வொரு நாட்டுக்கும் அதன் பங்கு தீர்மானிக்கப்படக்கூடும். இதில் இவ்வளவு அதில் அவ்வளவு என்று அது ஜெர்மனிக்கு சப்ளை செய்தாக வேண்டும். ஒரு பொருள் உற்பத்தியை அது அதிகப்படுத்தும், மற்றொன்றின் உற்பத்தியைக்குறைக்கும். எதற்கும் எலலாம் த்தாஸ்து போடவேண்டியதுதான். ஏன்? இதுவரையில் சுதந்திரத்தோடுள்ள நாடுகள் கூட 'முடியாது' என்று சொல்வதாயிருந்தால் உடனே டாங்குகளும் குண்டெறி விமானங்களும் தங்கள் எல்லையிலே வந்து அனர்த்தம் விளைப்பதற்குத் தயாராயிருக்கவேண்டும். அவைகளை எதிர்த்து நிற்கவோ ஒரு நாட்டுக்கும் போதிய பந்தோபஸ்து கிடையாது.

எட்டுச்சுரைக்காய் கறிக்குதவுமா?

இதுதான் திட்டம். காகிதத்திலே பார்க்கும்போது இது மிகப் பிரமாதமாகவுந்தான் தோன்றுகிறது. ஆனல் வெறும் ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும்மட்டும் என்ன செய்யமுடியும்? மோசமான அறுவடையைச்சரியாக்க முடியுமா? மாய்ந்து போய் கிடக்கும் ரெயில்வேக்களில் போக்குவரத்தை இரட்டிபிக்கமுடியுமா?

அப்புறம்—மிகமிக முக்கியமான அந்த பால்கன்நாடுகள் இருக்கின்றன. அவைகள் சப்ளை செய்யும் உணவுப்பொருள்களும் மூலப்பொருள்களும் கொஞ்சமல்ல.

ரஷ்ஷியா சும்மாயில்லை

ஜெர்மனி ஒரு நீண்ட யுத்தத்தை நடத்துவது சாத்தியமாயிருக்கக்கூடிய வகையிலே ஐரோப்பாவை ஹிட்லர்சரிப்படுத்திக்கொள்வதாயிருந்தால் அவர்பால்கன்நாடுகளைத்தன் ஆதிக்கத்திற் கொண்டு வந்தாக வேண்டும் ஜெர்மன் சுகாஸ்ரமத்துக்குள்ளே, போராட்டத்துக்காக ஜெர்மனிக்கு சப்ளை செய்வதற்காகவேயுள்ள அடிமை நாடுகளின் தொகுதிக்குள்ளே, யூகோஸ்லேவியாவையும் பல்கேரியாவையும் ருமேனியாவையும் அவர் கொண்டுவந்தாக வேண்டும்.

அவருக்கு இஷ்டமிருந்தாலுஞ்சரி, இல்லாவிட்டாலுஞ்சரி இன்னும் தென்கிழக்கே சென்று பால்கன் நாடுகளை ஜெர்மன் அழுவுக்குள்ளே கொண்டுவரவேண்டிய கட்டாயம் அவருக்கு ஏற்பட்டிருக்கிறது. இப்படிச்செய்தால் ரஷ்ஷியாவோடு சண்டை மூளாமல் இருக்க முடியாது. ஏனெனில், பால்கன் நாடுகள் ஜெர்மன் ஆதிக்கத்தின் கீழ் வருவது ரஷ்ஷியாவுக்குக் கொஞ்சங்கூடப் பிடிக்காது. ஆகவே அந்தத்திசையில் ஜெர்மனி நுழைந்தால் தற்சமயம் அது ராஜதந்திரார்த்தமாகவும் பொருளாதார விஷயத்துக்காகவும் மட்டும் இருந்தாலுங்கூட, அதை ரஷ்ஷ்யா ஆக்ஷேபித்து எதிர்க்கத்தான் செய்யும்.

இப்படித்தான் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. ஜெர்மெனியும் இத்தாலியும் யூகோஸ்லேவியாவைப் பயமுறுத்திய போது ரஷ்ஷியா இதற்கு எதிராக, வியாபார ஒப்பந்தமொன்றும் கொண்டதுடன் ரஷ்ஷியப்புரட்சி முதல் விடுபட்டுப் போயிருந்த ராஜீய ஸம்பந்தத்தையும் புதுப்பித்தது. பல்கேரியாவில் ஜெர்மனி தன் சூழ்சிகளை அதிகப்படுத்திய போது ரஷ்ஷியாவுக்கும் பல்கேரியாவுக்கு மிடையில் உறவு பலப்பட்டது இரும்புப் படைத்தலைவர்களின் விடுதலையிருந்து ருமேனிய அரசர் கரோல் நாஜிவலையில் விழுகிறார் என்று தெரிந்தவுடனே சோவியச்சர்க்கார் பெஸ்ஸரேபியாவைப் பிடித்துக்கொண்டது இப்படிச்செய்தபோது ரஷ்ஷியா தன் நிலைமையையும் உணர்ச்சியையும் தான் வெளிப்படுத்தியது.

இரண்டில் ஒன்று

ஹிட்லரின் சூதாட்டத்திலே இந்த அம்சம் இப்படித்துரிதமாய் அபிவிருத்தியடைத்து வருகிறது. என்ன நடக்கப்போகிறதென்று யாரும் திட்டமாய்ச் சொல்லமுடியாது. ஆனல் எல்லாம் விசித்திரமாயிருக்கிறது. ஒன்று ஹிட்லர், தன்னை போர் முனையில் எதிர்த்து நிற்கக் கூடிய ஒரு ஐரோப்பியவல்லரசோடு சண்டை பிடித்தாக வேண்டும். அல்லது பாலக்கன் நாடுகளைத் தன்வலைக்குள் இழுக்கும் எண்ணத்தையே அடியோடுவிட்டுவிடவேண்டும்' இந்த எண்ணத்தை விட்டுவிட்டாரானல் ஐரோப்பாவைப் புதியகண்டமாக்கும் திட்டமெல்லாம் வெறும் எட்டுச்சுரைக்காயாய்ப்போக வேண்டியதுதான். இந்த நிலைமையை அவர் ஏற்கெனவே உணர ஆரம்பித்திருக்க வேண்டும். ஆகவே ப்ரிட்டனை அடித்துத் தீர்த்துவிட்டு அதன் பிறகு மெல்ன் காம்பில் சொல்லியுள்ள இந்நாடுகளை வெல்லவேண்டுமென்னும் தமதுகனவு நிறைவேறுவதற்காகஸோவியத்யூனியனை ஒழிப்பதற்குத்தம்முழுப்பலத்தையும் கொண்டுதாக்கும் நம்பிக்கையுன் ப்ரிட்டனை அவர் மிக உக்கிரமாகத் தாக்கலாம்.

ப்ரிட்டன் ரஷ்ஷியா இரண்டையும் வென்று விடலாமானல் அவர் ஐரோப்பாவுக்கு அதிபதியாகி அந்தக்கண்டத்தையே தம் மனம் போனபடி மாற்றியமைத்து விடலாம். இல்லையேல் என்றும் பலிக்காது.

பணத்தைப்பற்றி பயம் வேண்டாம்

இந்தப்பண லேவாதேவிக் குழப்பம் சீக்கிரம் தீர்ந்துவிடும்.

நாணய மாற்று நிலைமை திடமாயிருக்கிறது

கடைசியாகக் கிடைத்துள்ள வார விவரக் கணக்கின்படி நாணயமாற்று அதிகாரிகளின் நிலைமை எப்படியிருக்கிறதென்று விவரித்துக் கூறுவதுதான் இதற்குச் சரியான வழியாகும்.

1940-ஹு ஜூன்-மீ 7உயன்று மொத்தத்தில் சுமார் 263 கோடி ரூபாய்க்கு ரிஸெர்வ் பாங்கு நோட்டுகள் வெளிவிட்டது. இந்த நோட்டுகளுக்கு ஆதாரமாக நான்குவித இருப்புக்கள் இருக்கின்றன:—

1. தோலா ரூ. 21—3—10 வீதம் 44 கோடி மதிப்புள்ள பொன்.

இந்தப் பொன்னைத் தற்போதைய விலைப்படி இது தோலா 2-க்கு ரூ. 43 முதல் ரூ. 48 வரை போகிறது—மீண்டும் மதிப்பிட்டால் இப்போது புழங்கிக்கொண்டிருக்கும் நோட்டுகளில் பெரும்பகுதிக்குக் கொடுக்க இதுவே போதுமானதாயிருக்கும்.

2. நாணயங்கள் கொடுக்கும் இலாகாவில் 42 கோடி மதிப்புள்ள ரூபா நாணயங்கள் இருப்பதற்றி நோட்டுகளுக்கு ஆதாரமாக இன்னுமதிகமாகவே ரூபா நாணயங்களும் தங்கம், வெள்ளி இவையும்அதிகாரிகளிடம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

3. 128 கோடி ரூபாய் மதிப்புள்ள ஸ்டெர்லிங் ஸெக்யூரிடிகள்.

4. சுமார் 47 கோடி ரூபாய் மதிப்புள்ள இந்தியா கவர்ன்மெண்ட் ரூபாய் ஸெக்யூரிடிகள்.

நோட்டுகளுக்கு மத்திய சர்க்காரின் உத்தரவாதம் மொத்தமும்மட்டுமன்றி கையிருப்பிலுள்ள தங்கம், வெள்ளி இவையும் ஆதாரமாயிருக்கின்றனவென்பது இதிலிருந்து தெரியவரும். நாணய மாற்று நிலைமை இப்படியிருக்க, ரூபாய்க்குமதிப்பு உயர்ந்து வருவதாலும், அதற்கேற்றபடி விலை வாசிகளும் சிறிது உயருவதாலும், போட்டு வந்திருக்கும் தொகையை எளிதில் மாற்றக்கூடியநிலைமையில் பாங்கிகள் இருந்து வருவதாலும் பாங்கி விவகாரங்கள் மிகவும் ஜாக்கிரதையாக நடத்து வருகின்றன வென்று தெரிகிறது. நாணய மாற்று நிலைமையும் பாங்கிவிவகாரங்களைக் கவனிக்கும் அதிகாரிகளின் நிலைமையும் இந்தியாவில் மிக மிக திடமாயிருப்பதாக இதிலிருந்து தெரியவரும். ஆகவே சென்ற சிலவாரங்களில் ஏற்பட்ட குழப்பம் மேற்குப்போர் முனையிலிருந்து வரும் பயங்கரமான செய்திகளைக்கண்டு யோசனையற்ற விஷயந் தெரியாத மக்கள் பயந்து விட்டதனலயே ஏற்பட்ட தென்று அறியலாம்.

அத்வைத ஸபை, கும்பகோணம்.

நாளது விக்ரம-ஹு ஆவணி-மீ 12-உ (27—8—40) செவ்வாய்கிழமை நமது ஸபையின் வருஷாந்திர வித்வத் ஸதஸ் ஆரம்பம் ஆகி வழக்கம்போல் ஒருவாரம் கும்பகோணத்தில்நடைபெறும். கக்ஷ்யா பரீக்ஷைகளுக்கும், தர்மஞ கிருஹ்யக்ஞ பரீக்ஷைகள் இவைகளுக்கும் மனுச்செய்து கொள்பவர்கள் 5—8—40க்குள் மனுச்செய்து கொள்ளும்படி கோரப்படுகிறது.

எம். கே. வைத்தினதைய்யர்
காரியதரிசி,

மதராஸ் லாஜர்னல் பிரசுரங்கள்.

வால்மீகி ராமாயணம் 7 காண்டம் (தேவநாகரலிபியில்) தின் பேப்பர்	5	0	0
திக் பேப்பர்	4	0	0
From his master's Lips	1	0	0
Hindu Ideal	3	0	0
ஸ்வாமிகள் உபன்யாஸங்கள் 1 பாகம்	1	8	0
" " " 2 "	0	10	0

போலிகளை ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும்
கைகண்ட இந்தியமருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்

RINGWORM OINTMENT
AMRUTANJAN Ltd.
BOMBAY, MADRAS, CALCUTTA.

ஓர் உயர் குடும்ப விவாஹம்.

திருவாமாத்தூர்

விக்ரம ஸூ ஆனி மீ 24உ (7—7—40) ஞாயிற்றுக்கிழமை தினம் இவ்வூருக்கு சமீபத்திலுள்ள திருவாமாத்தூர் என்னும் க்ஷேத்ரத்தில், செங்கற்பட்டு ஜில்லா வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கம் உபகார்யதர்சியும், சென்னை மாகாண வர்ணாச்ரம சுயராஜ்ய ஸங்கம் கார்யகமிட்டி அங்கத்தினருமான ஸ்ரீமான் பி. என். நாராயண சாஸ்திரிகளுக்கும் சென்னைஸோமதேவசர்மா அவர்களின் பந்து வர்க்கத்தைச்சேர்ந்த ஸௌ மங்களம் என்னும் கன்னிகைக்கும் உயர்ந்த வைதிக முறையில் விவாஹம்நடைபெற்றது. இதற்கு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஆசார்யாள், வரனுக்கு நேரில் ஆசிர்வதித்திருந்ததுடன் ஆசீர்வாத காலத்தில் நூதன வஸ்திரம் பிரஸாதங்களும் அனுப்பி அனுக்ரஹம் செய்திருந்தார்கள். ஸ்ரீ சேந்தமங்கலம் ஸ்வயம்பிரகாச ப்ரம்மேந்திரா வதூதஸ்வாமிகள் ஸ்ரீ தத்தமூர்த்தியின் பிரஸாதமும் ஸ்ரீ முகமும் அனுப்பி அனுக்ரஹித்திருந்தனர். தவிர செங்கற்பட்டு ரிடையர்ட் போஸ்டு மாஸ்டர் பிரம்மஸ்ரீ வி. விச்வநாதய்யரவர்கள் திருநெல்வேலிவக்கீல் பிரம்மஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமிய்யரவர்கள் மஹாதான ஸ்ரீ நாகரத்னம் அய்யர் முதலியோர் ஆசிச்செய்திகள் அனுப்பியிருந்தார்கள். ——— ந. நி

அ. இ. வ. சு. ஸங்கம் ஜயப்ரார்த்தனை

பரமந்தூர்.

15—7—40ம் தேதியன்று ஏற்கனவே இந்து மதபரிபாலன போர்டாரின் சுற்றறிக்கையின் பிரகாரம் இவ்வூர் தேவஸ்தானம் பஞ்சாயித்தார்களாலும் இவ்வூர் மகாஜனங்களாலும் இவ்வூர் அகில இந்தியா வர்ணாச்ம சுயராஜ்ய ஸங்கத்தார்களாலும் பராசர க்ஷேத்திரமென்னும் இம்மஹா க்ஷேத்திரத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஆதி கேசவப் பெருமாளுக்கும் இஷ்டசித்தி பலதாயகியாகிய ஸ்ரீ பரிமளவல்லி நாயகிக்கும் காலை விசேஷ திருமஞ்சனம் தளிகை ஸஹஸ்ர நாம அர்ச்சனை முதலியதுகள் செய்து இப்போது நடந்துவரும் மஹாயுத்தத்தில் நம் சக்கிரவர்த்தியே ஜயிக்கவேண்டுமென்றும் அனீதமாய் நடக்துவரும் ஆலயப்ரவேசம் ஒழிய வேண்டுமென்றும் ஸநாதனதர்மம் நீடூழி வாழவேண்டுமென்றும் பிரார்த்தனைகள் செய்யப்பட்டன. நெய் தீபங்களும் அன்ன தானங்களும் வழங்கப்பட்டது. ந. நி.

ஓர் ஸந்தேகம்!

6 மாத வயதுள்ள ஆபஸ்தம்ப ஸூத்திர ஆண் குழந்தைக்கு ஜாதகர்ம, நாமகரண அன்னபிராசனம் இதுகள் ஒரேநாளில், செய்யும்பொழுது "உதகசாந்தி, வேண்டுமா வேண்டியதில்லையா? தவிர ஷஷ்டி கர்மாக்களை செய்த பொழுது சௌள ஹோமத்தையும் சேர்த்து செய்ய ஆதாமிருக்கிறதா? இதே கர்மா ஸமீபத்தில் செய்ய வேண்டியிருப்பதால் தாமதமன்னியில் தெரிவிக்கும்படி வித்வான்களை கேட்டுக்கொள்கிறேன்.

—— எ. சுந்தர சாஸ்திரியள்.

ஓர் எச்சரிக்கை!

பால்ய விவாஹம் இல்லாதிருந்தால் வரதக்ஷிணை குறையுமென சிலர் கூறினர். அது குறையாமல் அதிகரித்ததுடன் பற்பல துன்பங்கள் நேரிடுகின்றன. கன்யா பிதாக்களுக்கு இது ஓர் எச்சரிக்கையாக இருக்குமென இவ்வாண்டு நடந்த விசித்ரவிவாஹங்களில் சில கூறுவாம்.

வயதான ஓர் கன்யகைக்கு வரந்தேடும் போதே அது வேண்டாம், எனக்கு விவாகம் வேண்டாமெனகூறிற்று. தனிகரான பிதா 3 ஆயிரம் வரதக்ஷிணைதந்து நிச்சிதார்த்தகாலத்தில் கன்யகை காணமல் தேடினார். அது வரமுடியா தென்றது. கைவிட்டு காசு போயிற்று!

கோயில் பணத்தை கையாடல் செய்ததாக தேவஸ்தான ஆபீஸர்மீது வழக்கு

ஸ்ரீ வைகுண்டம் தேவஸ்தான எக்ஸிகூடிவ் ஆபீஸராயிருந்த ஸ்ரீமான் பெரியசாமி முதலியார் மீது சென்னை எண்டோமெண்ட் பிரஸிடெண்டால் கோயில் பணத்தை கையாடல் செய்து நம்பிக்கை மோசம் செய்திருப்பதாய் 408 409வது பிரிவுப்படி ஸ்ரீ வைகுண்டம் சப்மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டு நடைபெற்று வந்தகேஸை வேறு கோர்ட்டுக்கு மாற்ற வேண்டுமென பிரதிவாதியான மாஜி எக்ஸிகூடிவ் ஆபீஸர் சென்னை ஹைக்கோர்ட்டில் கொடுத்திருந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மறுபடி ஸ்ரீ வைகுண்டம் சப் மா ஸ்ரீமான் என். நம்பிஐயங்கார் பி. ஏ. யால் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. போர்டாருக்காக பாளையங் கோட்டை வக்கில் ஸ்ரீமான் ஸி. வி. கோபாலய்யரும் பிரதிவாதிக்கு தூத்துக்குடி வக்கீல் ஸ்ரீமான் சாம்பசிவய்யரும் ஆஜராகின்றனர்.

——— (ந. வி. கி.)

ஆழ்வார்திருநகரியில் ஆலயப்பிரவேச எதிர்ப்பு.

பிரிட்டன் வெற்றிபெற பிறர்த்தனை

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார் திருநகரில் சென்ற திங்களன்று மாலை சனாதனத்தலைவர் ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் தலைமையில் பிரும்மாண்டமான பெரிய கோஷ்டியொன்று ஸஹஸ்ரநாம பாராயணத்துடன் கோயிலை ப்ரதக்ஷிணமாய் வந்ததும் ஆலயப்ரவேச அதர்மச்சட்டம் ஒழியவும் பிரிட்டனுக்கு வெற்றியுண்டாகவேண்டியும் ஹிட்லரிஸம் அழியவும் சனாதனதர்ம கோஷ்டியினரால் பிறார்த்தனைகள் செய்யப்பட்டன. இரவு 8/30க்கு ஸனாதனிகளின் பொதுக்கூட்டமொன்று ஸ்ரீ ஆண்டாள் தேவஸ்தான வாசல் முன் மண்டபத்தில் நடைபெற்றது, ஸனாதனத்தலைவர் ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத்திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகளால் சனாதனதர்மிகள் கடமையும் தற்கால நிலையும் என்பதுபற்றி ஓர் அரிய உபந்யாஸம் செய்யப்பட்டது.

ஆலயப்ரவேச அதர்மச்சட்டத்தை கவர்மெண்டார் ரத்து செய்வார்களாயின் பிரிட்டனுக்கு விரைவில் வெற்றி நிச்சயமெனவும் ஸ்ரீ ஸ்வாமிகள் பிரஸ்தாபித்தனர். முடிவில் ஆலயப்ரவேசம் போன்ற அதர்மச்சட்டங்கள்யாவும் ஒழியும் படியாயும் பிரிட்டனுக்கு வெற்றியேற்படும்படியாயும் நிலைமை சீர்படும்படி செய்யவேண்டுமெனயாவரும் சர்வேஸ்வரனை பிரார்த்திக்கவேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. சனாதனதர்மகீஜே என்ற கோஷத்துடன் கூட்டம் முடிவெய்தியது.

Printed by S. Kalyanasundaram at the Sri Janardana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam.
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.